# கழார்க்கீரன் எயிற்றியார், ஔவையார் பாடல்களில் திணை மயக்கம்

**ஜோ.ஜோனிகா ஹேம்லட்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
லக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
நெய்யூர்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## நுழையுமுன்

எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் சங்க மேற்கணக்கு நூல்களாகும். இந்நூல்கள் அனைத்துமே அகப்பொருள்,புறப்பொருள் பற்றி அமைவன. அகம் + பொருள் = அகப்பொருள். தலைவன்,தலைவி இருவருக்கிடையே நிகழும் மன உணர்வுகளைப் புறத்தே எடுத்துரைக்க இயலாததை அகம் என்கின்றோம். இந்த அகப்பாடல்களில் தலைவன், தலைவி, நற்றாய், செவிலி, தோழி, பாணன், கண்டோர் கூற்றுகளாகவே காணப்படுகின்றன. அகப்பாடல்களைச் சான்றோர்கள் தன்னுணர்ச்சி பாடல்கள் என்று குறிப்பிடுவர். அகப்பாடல்களில் இன்னாரென்று ஒருவருடைய பெயர் சுட்டிக் கூறப்படுதில்லை. இதனைத் தொல்காப்பியர்,

**"மக்கள் நுதலிய அகனைந்திணையும்**
**சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்"**

என்ற நூற்பாவிற்கு இணங்க எட்டுத்தொகை நூல்களில் அகநூல்களாகிய நற்றிணை, குறுந்தொகை, ஐங்குநூறு, அகநானூறு, கலித்தொகை இவ்வைந்து நூல்களில் பெண் புலவர்கள் திணை மயக்கத்தைப் பற்றி பலர் தங்கள் பாடல்களில் பாடியிருந்தாலும், 'சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல்' என்னும் உத்தியின் வாயிலாக ஔவையார், கழார்க்கீரன் எயிற்றியார் போன்ற பெண் புலவர்களின் பாடல்களில் காணப்படும் திணைமயக்கம் குறித்து இக்கட்டுரையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## திணை மயக்கம்

அகத்திணை, புறத்திணை என இரு வகைத் திணைகள் பற்றி தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். திணை என்பது மக்களின் ஒழுக்கத்தை எடுத்துரைப்பது, ஒழுக்கம் இரு வகைப்படும் அவை, அக ஒழுக்கம் (அக வாழ்வு), புற ஒழுக்கம் (புற வாழ்வு) என்பதாகும்.

அகத்திணையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பவை அன்பின் ஐந்திணைகள். ஐந்திணைகள் உணர்த்தும் பொருட்கள் மூன்று. அவை,

| முதற்பொருள் | கருப்பொருள் | உரிப்பொருள் |
|---|---|---|
| நிலம், பொழுது | தெய்வம், | குறிஞ்சி- புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| | மக்கள், | முல்லை- இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| | உணவு, விலங்கு. | மருதம்- ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| | | நெய்தல்- இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| | | பாலை- பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பது போல, இலக்கியத்திலிருந்து இலக்கணம் தோன்றியது. சங்க இலக்கியப் பாடல்களில் ஐந்திணைகளுக்குரிய முதற்பொருளில் வரும் பொழுதும், கருப்பொருள்களும் பிறத் திணைகளுக்குள் மயங்கி வந்தமையைச் சங்க இலக்கிய பாடல்களில் பரவலாகக் காணலாம். உரிப்பொருள் மட்டும் மயங்கப் பெறுவதில்லை. இதனை தொல்காப்பியர் திணை மயக்கம் என பின்வரும் நூற்பாக்கள் வாயிலாகக்

**“திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே**
**நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிய**
**புலன்நன் குணர்ந்த புலமை யோரே”** **(நூற்.14)**
**“உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே”** **(நூற்.15)**

குறிப்பிட்டுள்ளார். பெண்பாற் கவிஞர்கள் பாடிய எட்டுத்தொகை அகப்பாடல்களுள் திணைமயக்கம் இடம் பெற்றுள்ளமையைக் காண முடிகிறது.

**ஔவையார்**

i) சுரம் என்பது பாலை நிலப்பகுதியைக் குறிக்கும். இதில் பாலை நிலத்திற்குரிய இடைச் சுரம் என்னும் நிலப்பகுதி முல்லைத் திணையில் மயங்கி உள்ளது.

**“இடைச் சுரத்து எழிலி உறைத்தென....** **(நற்.394)**

ii) மருத நிலத்திற்குரிய மணப்பாறை, சங்கொலி பாலை நிலத்தில் மயங்கி உள்ளது.

**“பறைபட பணிலம் ஆர்ப்ப, இறைகொள்பு**
**தொல்மூ தாலத்துப் பொதியில் தோன்றிய....** **(குறுந்.15)**

iii) மட்டுமன்றி இவரது பாடலில் முல்லை நிலத்திற்குரிய முதற் பொருளாகிய பெரும்பொழுதும், கார்காலமும், சிறு பொழுதாகிய மாலை நேரமும், குறிஞ்சி நிலத்திற்குரிய மலை, அருவி போன்ற முதற்பொருட்களும் நெய்தல் நிலத்தில் மயங்கி வந்துள்ளது. முல்லைத் திணைக்குரிய உரிப் பொருளாகிய ஆற்றியிருத்தலும் மயங்கி வந்துள்ளது.

**“பெய்த குன்றத்துப் பூநாறு தண்கலுழ்**
**மீமிசைத் தாஅய், வீசும் வளிகலந்து**
**இழிதரும் புனலும், வாரார் தோழி!**
**மறந்தோர் மன்ற, மறவாம் நாமே**
**கால மாரி மாலை மாமலை**
**இன்னிசை உருமின முரலும்**
**முன்வரல் ஏமம் செய்துஅகன் றோரே”** **(குறுந்.200)**

iv) மருதநிலத்திற்குரிய குருகு, வாடைக்காற்று, நெற்கதிர், கழனி, போன்றவையும், நெய்தல் நிலத்திற்குரிய கடலும் பாலை நிலத்தில் மயங்கி வந்துள்ளது.

**“விசும்பு விசைத்து எழுந்த கூதளங் கோதையின்**
**பசுங்கால் வெண்குருகு வாப்பறை வளை,**
**ஆர்கலி வளவயின் போதொடு பரப்ப,**
**புலம்புனிறு தீர்ந்த புதுவரல் அற்சிரம்**
**... ... ... ...**
**யாங்குஎன உணர்கோ, யானே? – வீங்குபு**
**தலைவரம்பு அறியாத் தகைவரல் வாடையொடு** **(அகம்.273)**

**கழார்க்கீரன் எயிற்றினார்**

i. இவரது பாடல்களிலும் பல்வேறு திணை மயக்கங்கள் பயின்று வந்துள்ளன. குறிப்பாக, குறிஞ்சி திணைக்குரிய பெரும்பொழுதாகிய கூதிர் காலமும், சிறுபொழுதாகிய நள்ளிரவும் (நடுநிசி) பாலை நிலத்தில் மயங்கி வந்துள்ளது.

**மழைமைந்து உற்ற மால்இருள் நடுநாள்**
**தாம்நம் உழைய ராகவும், நாம்நம்**
**பனிக்கடு மையின் நனிபெரிது அழுங்கி**
**துஞ்சாம் ஆகலும் அறிவோர்**
**அன்பிலர் தோழிநம் காதலோரே" (நற்.281)**

ii. மருத நிலக் கருப்பொருளாகிய கொக்கும், குறிஞ்சி, முல்லை, நிலத்திற்குரிய பெரும்பொழுதாகிய கூதிர் காலமும், கார்காலமும் பாலை நிலத்தில் மயங்கி உள்ளது.

**பனிப்புதல் ஈங்கை அம்குழை வருட**
**சிறைகுவித் திருந்த பைதல்வெண் குருகு**
**பார்வை வேட்டுவன், காழ்களைந் தருள**
**மாரி நின்ற, மையல் அற்சிரம்**
**யாம்தன் உழையம் ஆகவும்....... (நற்.312)**

iii. இவரது பாடல் அகம். 217-ல் மருதத்திணைக்குரிய கருப்பொருளாகிய நாரையும், முல்லை நிலக் கருப் பொருளாகிய மருதோன்றி, அவரைக் கொடி போன்றவையும் பாலையில் மயக்கமுறுவதைக் காணலாம்.

**நீல்உண் பச்சை நிறம்மறைத்து அடைச்சிய**
**தோல்ஏறி பாண்டிலின் வாலிய மலர**
**கோழிலை அவரைக் கொழுமுகை அவிழ**
**ஊழ்உறு தோன்றி ஒண்பூத் தளைவிட**
**புலம்தோறும் குருகினம் நரல, கல்லென (அகம் -217)**

iv. இவரது பாடல் அகநானூறு 235ல் மருதநில முதற்பொருளாகிய வயலும், கருப்பொருளாகிய நண்டு, கரும்பு போன்றவையும் பாலை திணையில் மயங்கி உள்ளது.

**பயன்நிலம் குழையவீசி, பெயல் முனிந்து**
**விண்டு முன்னிய கொண்டல் மாமழை**
**மங்குல் அற்கமொடு பொங்குபு துளிப்ப**
**வாடையொடு நிவந்த ஆய் இதழ்த் தோன்றி**
**சுடர்கொள் அகலின் சுருங்குபினி அவிழ**
**கரிமுகிழ் முசுண்டைப் பொதிஅவிழ் வான்பூ**
**விசும்பு அணி மீனின் பசும்புதல் அணிய**
**களவன் மண் அளைச் செறிய, அகல்வயல்**
**கிளைவிரி கரும்பின் கணைக்கால் வான்பூ**
**மாரிஅம் குருவின் ஈரிய குரங்க (அகம்.235)**

மட்டுமன்றி, அகநானூறு 294ல் மருத நிலக் கருப்பொருளாகிய நெல் முல்லைத் திணையில் மயங்கி வந்துள்ளது.

**அவரை பைம் பூப் பயில, அகல்வயல்**
**கதிர்வார் காய்நெல் கட்கு இனிது இறைஞ்ச (அகம்.294)**

**முடிவுரை**

ஐந்திணைகளில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பவற்றுள்,

முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள்

நிலம் பொழுது மயங்கும் மயங்காது

மயங்காது மயங்கும்

பெண்பாற் புலவர்களின் பாடல்களிலும் திணை மயக்கம் அமையப்பெற்றுள்ளமை கண்கூடு.